## தேசிய திரைப்பட அபிவிருத்தி நிதியம் - 2015

தேசிய திரைப்பட அபிவிருத்தி நிதியத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களின் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 47 ஆம் இலக்க இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபன அதிகாரச்சட்டத்தின் 5 ஆம் பிரிவு மற்றும் 61 ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட 1994 இன் 1 ஆம் இலக்க தேசிய திரைப்பட அபிவிருத்தி நிதிய கட்டளைக் கோவையின் 12 ஆம் இலக்க கட்டளையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மேற்கூறப்பட்ட நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தினால் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக் கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர, தேசிய திரைப்பட அபிவிருத்தி நிதியத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 01**

(i) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள் மூலம் தேவைப்படும் போது அல்லது அனுமதி அளிக்கப்பட்டிருக்கையில் அல்லாமல் வருமானம் மற்றும் செலவினங்கள் எதிரீடு செய்யக் கூடாத போதிலும் 2015 ஆம் ஆண்டில் வெளிநாட்டு திரைப்பட தயாரிப்பாளர்களால் இலங்கையினுள் திரைப்பட தயாரிப்பின் போது கிடைக்கப் பெற்றிருந்த ரூபா 530,000 ஆன வருமானத்திலிருந்து திரைப்பட மேற்பார்வை உத்தியோகத்தர்களுக்கு செலுத்திய ரூபா 373,000 செலவினத்தை ஈடுசெய்து தேறிய விளைவான ரூபா 157,000 மாத்திரம் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ii) நிதிக்கூற்றுக்களில் அம்சமொன்றான உரிமை மூலதனத்திலான மாற்றங்கள் கூற்று, நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம்**

நிலையான சொத்துக்களின் பெறுமானத்தேய்விடும் கொள்கை நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தேசிய திரைப்பட அபிவிருத்தி நிதியம் 2007 ஆம் ஆண்டின் போது இந்திய தனியார் ஆய்வுகூடமொன்றுடன் இணைந்து திரைப்படமொன்றை தயாரிப்பதற்கு திட்டமிட்டு அதற்காக ஆரம்ப செலவாக ரூபா 200,000 செலவு செய்ததன் பின்னர் அதனை செயற்படுத்தாமல் கைவிடப்பட்டிருந்த போதிலும் அச் செலவினம் குறித்த ஆண்டின் செலவினமொன்றாக பதிவழிக்கப்படாமல் தொடர்ந்தும் இருப்பு மீதியொன்றாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) கணக்காய்வின் போது மேற்கொள்ளப்பட்ட கணிப்பீட்டின் பிரகாரம் மீளாய்வாண்டில் பணமாக கிடைத்த முதலீட்டு வருமானம் ரூபா 2,476,791 ஆக இருந்த போதிலும் காசுப் பாய்ச்சல் கூற்றில் அது ரூபா 2,725,981 ஆக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) 2014 ஆம் ஆண்டில் ரூபா 292,174 மற்றும் 2015 ஆம் ஆண்டில் ரூபா 307,174 என நிலையான நிலையான வைப்புக்களுக்காக வட்டியாக நிறுத்தி வைக்கப்பட்ட வரித்தொகை ஆண்டிற்குரிய செலவினமொன்றாக பதிவு செய்யாமல் கிடைக்க வேண்டிய மீதிகளாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) நிதியத்தினால் அரச வங்கியொன்றில் பேணிச் சென்ற கணக்கில் 2015 சனவரி முதல் 2015 திசெம்பர் வரை ரூபா 20,000 இனங்காணப்படாத மீதியொன்று காணப்பட்டதுடன் அப் பணத்தை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 கணக்காய்விற்கான சான்றின்மை

2015 ஆம் ஆண்டில் கொழும்பு சர்வதேச சினிமா விழாவை நடாத்துவதற்காக நிதியத்திற்காக தேசிய திரைப்பட கூட்டுத்தாபனம் செலவிடப்பட்டிருந்த ரூபா 5,000,000 தொகையான கொடுப்பனவு தொடர்பாக உறுதிப்படுத்தும் ஆவணங்கள் எதுவும் கணக்காய்வின் போது சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

1996 ஒக்தோபர் 24 ஆந் திகதிய 946/9 ஆம் இலக்க திரைப்பட அபிவிருத்தி நிதியம் தொடர்பான வர்த்தமானிப் பத்திரத்தின் கட்டளை இலக்கம் 6(இ) பிரகாரம் கடன் திருப்பிச் செலுத்தப்படுவதில் தாமதம் ஏற்பட்டால் அதற்காக அறவிடப்பட வேண்டிய மிகை அறவீடு நிச்சயிக்கப்பட்டு அறவிடப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டு வரை வழங்கப்பட்ட ரூபா 74,336,614 ஆன கடன் தொகை தொடர்பாக அதன் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான நிதியத்தின் நிதி விளைவுகள் ரூபா 384,475 ஆன மிகையாக இருந்ததுடன், அதற்கு எதிரான முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 679,301 ஆக இருந்தது. அதன் பிரகாரம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது நிதியத்தின் நிதி விளைவுகளில் ரூபா 1,063,776 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டின் போது திரைப்பட விழா செலவினம் ரூபா 5,000,000 ஆல் அதிகரித்திருந்த போதிலும் நிதி மற்றும் ஏனைய செலவினம் ரூபா 5,914,483 ஆல் குறைவடைந்தமை மற்றும் திரைப்பட வாடகை பங்களிப்பு ரூபா 541,832 ஆல் அதிகரித்தமை இந்த அதிகரிப்பிற்கு பிரதான காரணங்களாக இருந்தன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

1971 இன் 47 ஆம் இலக்க இலங்கை தேசிய திரைப்பட கூட்டுத்தாபனச் அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் உள்நாட்டு திரைப்படக் கைத்தொழில்களுக்கு தேவையான உபகரணங்கள் மற்றும் மூலப் பொருள் வழங்கல், திரைப்படங்களை உள்நாட்டில் தயாரிப்பதற்காக உதவி புரிதல், உயர் தரத்தினை உறுதிப்படுத்தல், மற்றும் உதவி ஒத்தாசை வழங்கல், பார்வையாளர்களினதும் சினிமா கொட்டகைகளினதும் ஊழியர்களின் வசதி மற்றும் பாதுகாப்பிற்காக தேவையான போதியளவு வசதிகளை சினிமா

கொட்டகைகள் வழங்குவதை உறுதிப்படுத்தல், கலைஞர்களுக்கும் தொழில்நுட்பவியலாளர்களுக்கும் புலமைப்பரிசில்களை வழங்குதல் அல்லது பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை உருவாக்குதல், ஐந்து வருடங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட காலமாக தொடர்ச்சியாக உள்நாட்டு கைத்தொலில் ஈடுபட்டுள்ள மற்றும் பத்து திரைப்படங்களுக்கு குறையாத எண்ணிக்கையில் நடவடிக்கைகளை பூர்த்தி செய்த தொழில் துறை கலைஞர்களுக்கு அவர்களின் நிபுணத்துவத்தை அதிகரித்துக் கொள்வதற்கும் மேம்படுத்துவதற்கும் கடன் வழங்குதல் பிரதான நோக்கமாகும்.

மேற்படி நோக்கத்தை நிறைவேற்றுவது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

மீளாய்வாண்டில் 2 திரைப்படங்களை தயாரிப்பதற்காக கடன் வழங்குவதற்கு ரூபா 10 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் நிர்வாக சபையொன்று இல்லாமையால் அத்தீர்மானங்கள் நடைமுறைப்படுத்தப்படாதிருந்ததுடன் கலைஞர்களுக்கும் தொழில்நுட்ப வல்லுனர்களுக்கும் புலமை பரிசில் வழங்கவோ பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்துதல், ஐந்து வருடங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட காலமாக தொடர்ச்சியாக உள்நாட்டு கைத்தொழில் ஈடுபட்டுள்ள மற்றும் பத்து திரைப்படங்களுக்கு குறையாத எண்ணிக்கையில் நடவடிக்கைகளை பூர்த்தி செய்த தொழில்துறை கலைஞர்களுக்கு அவர்களின் நிபுணத்துவத்தை அதிகரித்துக் கொள்வதற்கும் மேம்படுத்துவதற்கும் கடன் வழங்கும் நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக மீளாய்வாண்டில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

மீளாய்வாண்டின் இறுதியளவில் 5 இற்கு 13 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலப்பகுதியிலிருந்து காணப்படும் ரூபா 67,007,500 ஆன கடன் மீதிகளை அறவிட முடியாத கடன் மீதியாக இனங்காணப்பட்டிருந்தது. 2015 ஆம் ஆண்டில் முழுக் கடன் அளவில் ரூபா 531,101 தொகையான அதாவது 0.71 சதவீதம் மாத்திரமே அறவிடப்பட்டிருந்ததுடன், எஞ்சிய கடனை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.3 தொழிற்பாட்டு செயற்பாடுகள்

1994 இன் 1 ஆம் இலக்க தேசிய திரைப்பட அபிவிருத்தி நிதியத்தின் 04/166 ஆம் இலக்க கட்டளை கோவையின் 5.1 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிய முகாமைத்துவம் மற்றும் கட்டுப்பாட்டு என்பவற்றிக்காக கட்டுப்பாட்டு சபையொன்று நியமிக்கப்பட வேண்டிய போதிலும் 2012 ஆம் ஆண்டின் பின்னர் கட்டுப்பாட்டுச் சபை நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்.

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி / 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் நிதியத்தினால் 2015 ஆம் ஆண்டிற்குரிய கணக்குகள் 2016 மே 11 ஆந் திகதி அதாவது 72 நாட்கள் தாமதத்தின் பின்னர் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 5.2 கூட்டிணைந்த திட்டம்

அபிவிருத்தி நிதியம் பாராளுமன்ற அதிகாரச்சட்டத்தின் கீழான கட்டளைக் கோவையொன்றை அடிப்படையாகக் கொண்டு தோற்றுவிக்கப்பட்ட சுயாதீன நிறுவனமொன்றாக இருந்த போதிலும் 2015 ஆம் ஆண்டிற்காக கூட்டிணைந்த திட்டமொன்று தயாரித்திருக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.3 செயல்நடவடிக்கைத் திட்டம்

2015 ஆம் ஆண்டிற்காக செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.4 உள்ளகக் கணக்காய்வு

நிதிப்பிரமாணம் 133 மற்றும் 134 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் உள்ளக கணக்காய்வொன்று இடம்பெற்றிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது நிதியத்தின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகளின் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகிறது.

| | முறைமைகளும் கட்டுப்பாட்டுத் துறைகளும் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | பதவியணியினர் நிர்வாகம் | பதவியணியினருக்காக வேலை பகிர்வு மேற்கொள்ளப்படாமை |
| (ஆ) | கடன் வழங்கல் மற்றும் அறவிடுதல் | கடன் வழங்கல் மற்றும் அறவிடும் போது விதிக் கோவையை நாளதுவரையாக்காமை மற்றும் நிலுவை கடன்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமை |